வடமாகாணக் கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன்
தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்

FWC

# Field Work Centre
## தவணைப் பரீட்சை, நவம்பர் - 2017
## Term Examination, November - 2017

| தரம் :- 12 (2019) | பொருளியல் – I | மூன்று மணித்தியாலங்கள் |
|---|---|---|

- **எல்லா வினாக்களிற்கும் விடை எழுதுக.**

**பகுதி - I**

(1) ஒவ்வொரு சமூகமும் பொருட்கள் சேவைகளின் உற்பத்தியில் தெரிவுப் பிரச்சினைக்கு முகம் கொடுப்பதற்கான காரணம்

i) மனித விருப்பங்கள் அதிகரிக்கும் வேகமும் வளங்கள் வளர்ச்சியடையும் வேகமும் ஒன்றுடனொன்று பொருத்தாமையினால்

ii) வளங்கள் மனித விருப்பங்கள், தேவைகள் தொடர்பில் அருமைத்தன்மை கொண்டவையாகவும் மாற்றுப் பயன்பாடு கொண்டவையாகவும் இருப்பதால்

iii) பொருளாதாரங்கள் குறைவிருத்தியுடையனவாக இருப்பதால்

iv) உற்பத்தி வளங்கள் காணப்படினும் அவை குறைந்த விளைதிறனைக் கொண்டிருப்பதால்

v) பொருட்கள் சேவைகளைக் கொண்டு பூர்த்தி செய்ய முடியாத வேறு தேவைகளும் சமூகத்தில் காணப்படுவதால்.

(2) பொருளியல் ஒரு சமூக “விஞ்ஞானம்” எனக் கருதப்படுவதற்கான மிக முக்கியமான காரணமாக அமைவது

i) அது மனித தேவைகள், விருப்பங்கள் பற்றி ஆய்வு செய்வதால்

ii) அது பொருளியல் சார் விதிகள் மனிதனது பொருளாதார நடத்தைகள் பற்றி ஆய்வு செய்வதால்

iii) அது பொருள் சார் நலனை உச்சப்படுத்த முயற்சிப்பதால்

iv) அது பொருளியல் ஆக்கச்சாதனங்களின் அருமைத்தன்மை பற்றி ஆய்வு செய்வதால்

v) அது எண்ணற்ற மனித தேவைகளின் தோற்றம் பற்றி ஆய்வு செய்வதால்

(3) பின்வருவனவற்றுள் நியமக் கூற்றாகக் கருதப்படுவது எது?

i) வருமானம் உயர்வடையுமாயின் ஆடம்பரப் பண்டங்களின் விற்பனை வீழ்ச்சியடையும்

ii) பொருளியலாளர்கள் பொருளாதார வளங்களை நிலம் உழைப்பு, மூலதனம், முயற்சி என வகைப்படுத்துகின்றனர்.

iii) அளவற்ற விருப்பங்களைப் பூர்த்தி செய்தற் பொருட்டு பொருளாதாரங்கள் வரையறுக்கப்பட்ட வளங்களையே கொண்டுள்ளன.

iv) சுற்றாடல் என்பது அருமையான வளத்திற்கு ஓர் உதாரணம் ஆகும்

v) இலங்கையின் பணவீக்கம் தற்போது ஒற்றை இலக்கத்தில் உள்ளது.

(4) “சந்தர்ப்பச் செலவு” பூச்சியமாக அமையக்கூடிய சந்தர்ப்பங்களில் ஒன்று எனக் கருதப்பட முடியாதது

i) அருமையற்ற வளங்களின் பயன்பாட்டின் போது

ii) மாற்றுப் பயன்பாடற்ற வளப்பயன்பாட்டின் போது

iii) குறைதொழில் மட்ட பொருளாதாரம் உற்பத்தியை அதிகரிக்கும் போது

iv) நிறைதொழில் மட்டம் நிலவும் போது

v) வளங்கள் யாவும் ஒரே ஒரு தேவைக்கு மாத்திரம் பயன்படுத்தக்கூடியதாக இருக்கும் போது

(5) x என்பவர் இரண்டு மணித்தியாலங்களுள் 8 மாம்பழங்களைப் பறிப்பார். அல்லது ஒரு மணித்தியாலத்தினுள் 20 கொய்யாப் பழங்களைப் பறிப்பார். எனின் ஒரு மாம்பழத்திற்கான அமையச்செலவு யாது?

i) 4 கொய்யாப் பழங்கள்
ii) 0.5 கொய்யாப்பழங்கள்
iii) 2.5 கொய்யப்பழங்கள்
iv) 5 கொய்யாப்பழங்கள்
v) மாம்பழங்களையும் கொய்யாப்பழங்களையும் தொடர்புபடுத்த முடியாது

(6) பின்வருவனவற்றுள் ஆதன வளங்கள் எவை?


i) இயற்கை வளங்களும் மூலதனச் சொத்துக்களும்
ii) நிலக்கரி கனியநெய், முயற்சியாண்மை
iii) தனியார் துறை ஊழியர்கள், அரசதுறை ஊழியர்கள்
iv) கூலித்தொழிலாளர்கள் அரச ஊழியர்கள்
v) நிலம், தளபாடம், முயற்சியாண்மை

(7) பின்வருவனவற்றுள் ஒரு முயற்சியாளரை வரைவிலக்கணப்படுத்தும் பிரதான கூற்றாக அமைவது

i) புதிய கம்பனிகளை உருவாக்குதல்
ii) உச்ச இலாபத்தை நோக்காகக் கொண்டிருத்தல்
iii) நிச்சயற்ற ஆபத்துக்களைத் தாங்குதல்
iv) ஏனைய உற்பத்திக்காரணிகளுக்கு வேலைவாய்ப்பை வழங்குதல்
v) ஏனைய உற்பத்திக்காரணிகளை ஒழுங்கமைத்தல்

(8) தரப்பட்டுள்ள வரைபடமானது நாடொன்றின் உற்பத்தி இயல்தகவு வளையியைக் காட்டுகின்றது. பின்வருவனவற்றுள் எப்புள்ளிக்கிடையிலான அசைவு வேலையின்மையில் ஏற்பட்ட ஓர் வீழ்ச்சியைக் காட்டுகின்றது.

i) W விலிருந்து Z வரையாகும்
ii) X விலிருந்து Y வரையாகும்
iii) Y விலிருந்து W வரையாகும்
iv) X விலிருந்து W வரையாகும்
v) U விலிருந்து V வரையாகும்




The National e-learning Portal for The General Education

(9) நிறைதொழில் மட்ட நிலமையின் இயல்புகளில் ஒன்றாக அமையாதது

i) உற்பத்தி சாத்திய வளைகோட்டின் மீது உற்பத்திப் புள்ளி அமைந்திருக்கும்.
ii) ஒரு பொருளின் உற்பத்தியை அதிகரிக்க வேண்டுமாயின் மற்றைய பொருளின் உற்பத்தியை விட்டுக் கொடுக்க வேண்டும்
iii) உற்பத்தியானது உச்சசெயற்றிறன் வாய்ந்ததாக இருத்தல்
iv) இரு பொருட்களின் உற்பத்தியினையும் அமையச் செலவு இன்றி ஒரே நேரத்தில் அதிகரிக்க முடியாமை
v) இரு பொருட்களின் உற்பத்தியையும் ஒரே நேரத்தில் அதிகரிக்கும் போது அமையச் செலவு ஏற்படமாட்டாது

(10) ஒரு தூய சந்தைப் பொருளாரத்திற்கு அவசியமான இயல்பு

i) உற்பத்திச்சாதனங்கள் யாவும் அரசுடமையாக இருத்தல்
ii) தனியார் துறையின் இலாபங்களில் கட்டுப்பாடுகள் காணப்படல்
iii) விலைப் பொறிமுறையின் சுதந்திரமான செயற்பாடு காணப்படல்
iv) வளங்களை ஒதுக்கீடு செய்வதில் பிரதான பொறிமுறையாகக் கட்டளைகள் காணப்படல்
v) நுகர்வோர் இறைமையுடையவர்களாக இருத்தல்


(11) 'நுகர்வோன் இறைமை' என்பதனால் கருதப்படுவது யாது?

1) நுகர்வோன் தான் விரும்பும் ஒரு பொருளுக்கு செலுத்த விரும்பும் விலையை விடக் குறைந்த விலையைச் செலுத்துதல்.
2) நுகர்வோன் தமது எல்லா விருப்பங்களையும் திருப்தி செய்து கொள்ள முடிதல்.
3) நுகர்வோரின் முன்னுரிமைகள் உற்பத்திக் கோலத்தில் செல்வாக்குச் செலுத்துதல்.
4) வெளியீட்டுத் தீர்மானங்கள் நுகர்வோரின் தேவையின் அடிப்படையில் எடுக்கப்படுதல்.
5) நுகர்வோர் தமக்கு விரும்பிய உற்பத்தியில் தமது உற்பத்திக் காரணிகளை ஈடுபடுத்த முடிதல்.

(12) 'நிலம், உழைப்பு, மூலதனம் போன்ற வளங்கள் குறைவாக இருந்த போதிலும் முயற்சியாண்மையினூடாக பொருளாதாரத்தை வளப்படுத்த முடியும்' என்பதற்கு உதாரணமாக விளங்கும் நாடு.

1) அமெரிக்கா 2) நியூசிலாந்து 3) சிங்கப்பூர் 4) இந்தியா 5) அவுஸ்ரேலியா

(13) குறித்த ஒரு பண்டத்தின் சந்தைக்கேள்வி வளையி பின்வருமாறு காட்டப்படுகின்றது. இக்கேள்வி வளையியுடன் தொடர்புடைய சரியான கேள்விச் சமன்பாடு.




1) 2d = 60 - 10p ஆகும். 2) Qd = 600 - 10p ஆகும்.
3) 2d = 600 - 0.1p ஆகும். 4) 2d = 60 - 0.1p ஆகும்
5) 2d = 600 - 60p ஆகும்.

(14) கேள்வி வளைகோடொன்றில் ஏனைய காரணிகள் மாறாத நிலையில் *x* பண்டத்தின் விலை 4 ரூபாவாக அதிகரிக்கின்றது. எனில் நிகழக்கூடியது.

1) *x* பண்டத்தின் கேள்வி குறைவடையும். 5
2) *x* பண்டத்தின் கேள்வி அதிகரிக்கும்.
3) *y* பண்டத்தின் கேள்வித் தொகை அதிகரிக்கும்.
4) *x* பண்டத்தின் கேள்வித் தொகை குறைவடையும்.
5) கேள்வி மாற்றமானது நெகிழ்ச்சியில் தங்கியிருக்கும்.

The National e-Learning Portal for The General Education

(15) நுகர்வோரின் வருமானம் அதிகரித்த போதும் எச்சூழ்நிலையின் கீழ் பண்டமொன்றிற்கான கேள்வி வீழ்ச்சியடைய முடியும்?

1) கேள்வியின் குறுக்குநெகிழ்ச்சி எதிர்க்கணியம் பெறுமானத்தைக் கொண்டிருக்கும் போது.
2) கேள்வியின் வருமான நெகிழ்ச்சி நேர்க்கணியம் பெறுமானத்தைக் கொண்டிருக்கும் போது.
3) கேள்வியின் விலை நெகிழ்ச்சி எதிர்க்கணியப் பெறுமானத்தைக் கொண்டிருக்கும் போது.
4) சம்பந்தப்பட்ட பண்டம் ஓர் இழிவுப் பண்டமாக இருக்கும் போது.
5) சம்பந்தப்பட்ட பண்டம் ஆடம்பரப் பண்டமாக உள்ள போது.

(16) குறிப்பிட்ட ஒரு பண்டத்தின் நிரம்பல் வளையியை வலப்புறம் நகர்த்தும் காரணியாக அமைவது.

1) கேள்வியில் ஏற்பட்ட அதிகரிப்பு
2) உள்ளீடுகளின் விலை உயர்வடைந்தமை.
3) தொழில்நுட்பத்திலான ஒரு மேம்பாடு.
4) குறிப்பிட்ட பொருளின் விலை உயர்வடைந்தமை.
5) போட்டி நிரம்பல் பொருளின் விலை அதிகரித்தமை.

(17) *2d = 400 - 10P* என்ற சமன்பாட்டில் 30 ரூபா விலையில் விலைசார் கேள்வி நெகிழ்ச்சி யாது?

1) *3* 2) *3.5* 3) *2* 4) *1* 5) *1.5*

(18) $x$ பண்டத்தின் விலை 10% அதிகரித்த போது $y$ பண்டத்தின் கேள்வி 5% வீழ்ச்சியடைந்தது. $z$ பண்டத்தின் கேள்வி 8% அதிகரித்தது. எனில் பின்வருவனவற்றுள் சரியான கூற்றாக அமைவது.

1) $x$ உம் $y$ உம் பதிலீட்டுக் கேள்வியைக் கொண்டவை.
2) $x$ உம் $z$ உம் இணைப்புக் கேள்வியைக் கொண்டவை.
3) $x$ உம் $z$ உம் நேர்க்கணிய பதிலீடு கொண்டவை.
4) $x$ உம் $y$ உம் எதிர்க்கணிய பதிலீடு கொண்டவை.
5) $x, y$ பண்டங்களுக்கிடையில் எவ்வித தொடர்பும் இல்லை.

(19) $x$ பண்டத்தின் விலைசார் கேள்வி நெகிழ்ச்சி 1.5 எனக்கொள்க. இந்நிலையில் $x$ பண்டத்தின் விலை 60 ரூபாவாகவுள்ள போது கேள்வித்தொகை 800 அலகுகளாகும். $x$ பண்டத்தின் கேள்வித்தொகை 1000 அலகுகளாகவுள்ள போது $x$ பண்டத்தின் விலை எவ்வளவாக இருக்கும்?

1) ரூபா 30 2) ரூபா 55 3) ரூபா 60 4) ரூபா 50 5) ரூபா 40

(20) குறித்த ஒரு பொருளின் கேள்வியைத் தீர்மானிக்கும் காரணிகளில் ஏனையவை மாறாத போது விலை குறைவதனால் அதன் கேள்வித் தொகை அதிகரிப்பது.

1) நுகர்வோரின் வருமானம் உயர்வடைதல்
ii) பதிலீடுகளின் விலை அதிகரிப்பதனால்
iii) நுகர்வோரின் மெய்வருமானம் அதிகரிப்பதனால்
iv) பதிலீடுகளின் சார்பு விலை மாற்றமடைவதால்
v) நுகர்வோரின் மெய்வருமானம் குறைவடைவதனால்.

The National e-learning Portal for The General Education

## பகுதி II

எவையேனும் **நான்கு** வினாக்களுக்கு **மட்டும்** விடை தருக.

*01.*

i. "பொருளாதாரமல்லாத வளம்" "பொருளாதாரமல்லா பண்டம்" என்பவற்றை வரையறுத்து அவற்றை வேறுபடுத்துக.?
*(04 புள்ளிகள்)*

ii. பொருளாதாரமல்லாப் பண்டங்கள் பொருளாதாரப் பண்டங்களாக மாற்றமடையும் விதத்தினை விளக்குக? *(04 புள்ளிகள்)*

iii. பின்வரும் கூற்றுக்கள் நேர் கூற்றுக்களா? நியமக் கூற்றுக்களா? எனக்குறிப்பிடுக?
அ) பொருளியல் மனித நடத்தை பற்றி ஆராய்வதால் அது ஓர் சமூக சிஞ்ஞானம் எனப்படுகின்றது.
ஆ) இலங்கையில் வயது முதிர்ந்தோர் சனத்தொகை அதிகரிப்பு முக்கிய பிரச்சினையாக உள்ளது.
இ) இலங்கை அரசாங்கம் பொருளாதார வளர்ச்சியை அடைய வேண்டுமாயின் மொத்த உள்நாட்டு உற்பத்தியை அதிகரிக்க வேண்டும்.
ஈ) இலங்கையில் வேலைவாய்ப்புக்களை அதிகரிப்பதன் மூலம் வறுமையைக் குறைக்க முடியும். *(04 புள்ளிகள்)*

iv. இயற்கை வளங்களை "மீளுருவாக்கக் கூடிய வளங்கள்" "மீளுருவாக்க முடியாத வளங்கள்" என உதாரணங்களுடன் வேறுபடுத்துக. *(04 புள்ளிகள்)*

v. "மனித தேவைகள்" "மனித விருப்பங்கள்" என்பவற்றை உதாரணங்கள் மூலம் விளக்குக.
*(04 புள்ளிகள்)*

*02.*

i. உற்பத்தி வளங்கள் என்பதை வரையறுத்து அவற்றின் பிரதான வகைகளைக் குறிப்பிட்டு விளக்குக? *(06 புள்ளிகள்)*

ii. ஒரு நாட்டின் "உற்பத்தி இயவளவினைத் தீர்மானிக்கும் காரணிகள்" எவை?
*(02 புள்ளிகள்)*

iii. வளங்களின் "வினைதிறனைத் தீர்மானிக்கும் காரணிகள்" எவை? *(02 புள்ளிகள்)*

iv. அமையச் செலவு என்னும் பதத்தை விளக்கி அமையச் செலவு பூச்சியமாகும் நிலமைகளைத் தருக? *(05 புள்ளிகள்)*

v. "உற்பத்தி சாத்திய வளையி" மூலம் பின்வரும் விடயங்களை விளக்குக?
அ) வேலையின்மை
ஆ) வளங்களின் அருமை
இ) நிறைதொழில் மட்டம்
ஈ) சர்வதேச வர்த்தகத்திலான நயம்.
உ) கைத்தொழில் துறைசார்ந்த பொருளாதாரப் பின்னடைவு. *(05 புள்ளிகள்)*

The National e-learning Portal for the General Education

03.

i. எந்த ஒரு பொருளாதாரமும் விடைகாண வேண்டிய மூன்று முக்கிய வினாக்களும் எவை? ஏன் எல்லா பொருளாதாரங்களும் அவற்றை எதிர்நோக்குகின்றன? (04 புள்ளிகள்)

ii. பொருளாதார அமைப்பை வகைப்படுத்தும் முக்கிய மூன்று நியதிகளும் எவை? (03 புள்ளிகள்)

iii. சந்தைப் பொருளாதாரம் ஒன்றில் விலைகளின் முக்கிய மூன்று தொழிற்பாடுகளும் எவை? (03 புள்ளிகள்)

iv. சமவுடமைப் பொருளாதாரமொன்றில் "அரச தலையீடு" இடம்பெறும் சந்தர்ப்பங்கள் எவை? (03 புள்ளிகள்)

v. "எதனை உற்பத்தி செய்தல்" என்ற வள ஒதுக்கீட்டுப் பிரச்சினைக்கு முதலாளித்துவப் பொருளாதாரமொன்றில் எவ்வாறு தீர்வு காணப்படும்? (04 புள்ளிகள்)

04.

i. "கேள்வி விதி" என்பதை வரைவிலக்கணப்படுத்துக. (02 புள்ளிகள்)

ii. கேள்வி விதியை நிர்ணயிக்கும் காரணிகள் எவை? (02 புள்ளிகள்)

iii. "கேள்வித் தொழிற்பாடு" "கேள்விச் சமன்பாடு" என்பவற்றை வேறுபடுத்துக. (04 புள்ளிகள்)

iv. "கேள்வி மாற்றம்" "கேள்வித் தொகை மாற்றம்" என்பவற்றை வேறுபடுத்துக. (04 புள்ளிகள்)

v. குறித்த ஒரு பண்டமொன்றின் கேள்வியை நிர்ணயிக்கும் காரணிகள் எவை? (04 புள்ளிகள்)

vi. குறிப்பிட்டவொரு சந்தையில் விலை ரூபா 60 ஆயின் கேள்வித் தொகை 0 ஆகும். விலை ஒவ்வொரு 10 ரூபா வீதம் குறைவடையும் போது கேள்வித்தொகை 50 அலகுகள் வீதம் அதிகரிக்கின்றது. விலை 0 ஆகும் போது கேள்வித் தொகை 300 அலகுகள் ஆகும்.

அ) இத்தரவுகளை அடிப்படையாகக் கொண்டு கேள்விக் கோட்பாட்டின் பொதுச் சமன்பாட்டைக் காண்க. (02 புள்ளிகள்)

ஆ) ரூபா 25 ஆக உள்ள போது சந்தைக்கேள்வி அலகுகள் யாவை? (02 புள்ளிகள்)

05. (i)

| x பண்டத்தின் விலை | x பண்டத்தின் கேள்வித்தொகை | y பண்டத்தின் கேள்வித்தொகை | நுகர்வோர் வருமானம் |
|---|---|---|---|
| 08 | 100 | 120 | 8000 |
| 12 | 80 | 160 | 10000 |

மேலே தரப்பட்டுள்ள அட்டவணையை அடிப்படையாகக் கொண்டு பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.

அ) x பண்டத்தின் வருமானம் சார் கேள்வித் நெகிழ்ச்சிக் குணகம் யாது?

ஆ) x,y பண்டங்களுக்கிடையிலான குறுக்குக் கேள்வி நெகிழ்ச்சி யாது?

இ) x,y பண்டங்கள் நெருங்கிய பதிலீட்டுப் பண்டங்களா? காரணம் தருக.

ஈ) ரூபா 8 இலும் ரூபா 12 இலும் இடையில் x பண்டத்தின் விலைசார் கேள்வி நெகிழ்ச்சிக் குணகத்தின் பெறுமதி யாது?

உ) x பண்டம் கேள்வி நெகிழ்ச்சியுள்ள பண்டமா? காரணம் தருக. (10 புள்ளிகள்)

ii. கேள்வி நெகிழ்ச்சியை நிர்ணயிக்கும் காரணிகள் எவை? *(04 புள்ளிகள்)*

iii. விலை வீழ்ச்சியால் ஏற்படும் ‘‘வருமான விளைவையும்’’ ‘‘பதிலீட்டு விளைவையும்’’ விளக்குக.

*(04 புள்ளிகள்)*

iv. Qd = 100 + 10P என்ற சமன்பாட்டால் காட்டப்படும் பொருட்கள் இரண்டு தருக.

*(02 புள்ளிகள்)*

*06.*

i. சந்தை ‘‘நிரம்பல் வளையி’’ ஒன்றை வரையும் போது நிலையானதாக இருப்பதாக எடுகோள் கொள்ளப்படும் காரணிகள் எவை? *(04 புள்ளிகள்)*

ii. பண்டமொன்றின் ‘‘நிரம்பல் வளையி’’ கீழிருந்து மேல்நோக்கி சரிந்து செல்வதற்கான காரணங்கள் எவை? *(04 புள்ளிகள்)*

iii. ‘‘நெகிழ்ச்சியுள்ள கேள்வி’’ ‘‘நெகிழ்ச்சியுற்ற கேள்வி’’ என்பவற்றை வேறுபடுத்துக.

*(04 புள்ளிகள்)*

iv. கேள்வியின் விலைசார் கேள்வி நெகிழ்ச்சிக் குணகம் எப்போதும் சய பெறுமானத்தைக் கொண்டிருப்பதற்கான காரணம் யாது? *(04 புள்ளிகள்)*

v. ஒரு நேரான கேள்விக் கோட்டின் வழியே நெகிழ்ச்சிக் குணகம் சீராகக் குறைவடைவதற்கான காரணம் ஆரம்ப விலைகள் ‘‘ஆரம்பத் தொகைகள்’’ மாற்றமடைவதே ஆகும். இக்கூற்றினை ஏற்பீரா? காரணம் தருக. *(04 புள்ளிகள்)*